போதாது. இந்தப் படங்களையெல்லாம் கோவிலுக்குள் நுழைகிற வாயிலில் மாட்டிவைத்துவிட்டால் எத்தனை விக்கிரகங்கள் எங்கு எங்கு இருக்கின்றன என்று எல்லோருக்கும் தெரியும். அதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நுழை வாயிலில் இம்மாதிரி படங்களை மாட்டி வைத்து விட்டால் படங்களே காணுமல் போய் விடலாம். சுலபமாகக் களவு செய்து விடலாம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : குறிப்பாக வெளிநாடுகளில் இந்த விக்ரகங்களை அதிக விலை கொடுத்து வாங்குவதன் காரணமாக இத்தகைய திருட்டுகளுக்கு ஒரு உணர்ச்சி ஏற்படுகிறது. ஆகவே, வெளிநாடுகளில் இத்தகைய விக்ரகங்கள் வாங்கும்பொழுது, நம்முடைய நாட்டு அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் வாங்கக்கூடாத அளவுக்கு, நம்முடைய நாட்டு மத சம்பிர தாயத்தை மதிக்கிற அளவுக்கு, வெளிநாட்டு அரசாங்கம் அதற் குரிய எக்ஸிக்யூடிவ் இன்ஸ்டிரக்ஷன்ஸ் போடுவதற்கு இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தின் மூலம் ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட விக்ரகங்களை அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் வெளிநாடு களுக்கு அனுப்பக்கூடாது என்ற நிலைமை இப்பொழுது இருக்கிற சட்டப்படியே இருக்கிறது. இருந்தாலும், அதையும் மீறி திருட்டுத்தனமாக சில விக்ரகங்கள் போகலாம்.

திரு. சா. கணேசன் : படங்கள் திருட்டுப்போய்விடும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். படங்கள் போனால் அதனால் பெரிய நஷ்டம் இல்லை. படங்களை கோவில் வாயில்களில் அமைத்து வைப்பதன் மூலம், கோவிலுக்குப் போகிற ஜனங்கள் அதைப் பார்ப்பார்கள். அவர்கள் கண்ணில் அந்தப் படங்கள் படும். அந்தப் படத்தை பார்த்துவிட்டு, என்றாவது சாமி விக்ரகம் காண வில்லை என்றால், எங்கே என்று கேட்பதற்கு இது வழிவகை செய்யும். ஆகவே, இம்மாதிரி செய்வதற்கு அவசியம் முன்வர வேண்டும், அப்படி முன்வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மக்கள் அசல் விக்ரகத்தை தரிசிப்பதற்காக கோவில்களுக்குச் செல்கிறார்கள். படத்தை மாட்டி வைப்பது என்று சொன்னால் அந்த ஒரு முக்கியத்துவத் திற்கு பாதகம் ஏற்படலாம். படத்தைப் பார்த்துவிட்டு ஜனங்கள் திரும்பிவிடலாம்.

Electricity Board

* 532 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have directed the Madras State Electricity Board to submit the Employees Regulations with reference to the clerical employees for certification ?

9th November 1966]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have requested the Madras State Electricity Board to have the Standing Orders for the clerical staff certified by the Certifying Officer (Commissioner of Labour) as soon as possible. The Board has accordingly sent the draft Standing Orders for certification on 22nd August 1966.

Gandhigram

* 533 *Q.*—SRI V. S. S. MANI : Will the Hon. Chief Minister be pleased to state—

(*a*) whether the grants given to various Units in Gandhigram, Madurai district are audit-free ; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஆண்டுதோறும் மாநில சர்க்காரும், மத்திய சர்க்காரும் எவ்வளவு மான்யம் வழங்குகிறார்கள் என்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி தனிக் கேள்வி வேண்டும்.

கம்பம் போலீஸ் நிலையம்

* 534 **கேள்வி.— திரு. மா. இராசாங்கம் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், கம்பம் நகரில் பொதுஉடமை தோழர் ஒருவரை அண்மையில் போலீஸ் நிலையத்தில் அடித்துத் துன்புறுத்தியதாகத் தகவல் வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) : The matter is *sub judice*.

பயிற்சிப்பள்ளிகள்

* 535 **கேள்வி.—திரு. நா. சௌந்தரபாண்டியன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரர்—

(அ) தமிழகத்தில் மாவட்டவாரியாக எத்தனை ஆண்கள் பெண்கள் முதுநிலை (Senior Basic) இளநிலை (Junior Basic) ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன ?

(இ) இந்தக் கல்வி ஆண்டில் எத்தனை பேர் முதுநிலை (Senior Basic) இளநிலை (Junior Basic) ஆசிரியர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் ?

(உ) வரும் கல்வி ஆண்டில் இளநிலை (Junior Basic) ஆசிரியர் பயிற்சியை நிறுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளதா ?